**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.88/2025</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திகேயன் | தந்தை பெயர் | : | ராஜா |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 10.03.2026

**P.W. : 1**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதிகள் திருவேங்கடம், நீலமேகம் ஆகியோர் எனது தாய்மாமாக்கள். கல்யாண சுந்தரம் என்பவர் எனது தாய்வழி தாத்தா. அவர் காவல்துறையில் பணியிலிருந்தார். பாலசுப்ரமணியன் என்பவர் எனது தாய்வழி சின்னதாத்தா ஆவார். சகுந்தலா அவரது மனைவி ஆவார். நான் முன்பு பெங்களுரிலிருந்த IBM நிறுவனத்தில் வேலை பார்த்தேன். அக்டோபர் 2008 முதல் அக்டோபர் 2015 வரை அங்கு வேலை பார்த்தேன்.

நான் அந்த காலகட்டத்தில் பெங்களூரிலிருந்து வேலை பார்த்தேனா என்றால் ஸ்ரீரங்கத்தில் வீட்டிலிருந்தே வேலை பார்த்தேன். அந்த காலகட்டத்தில் லட்சுமி நாராயண நகரில் இருந்த வாடகை வீட்டில் குடியிருந்தோம். பிறகு பார்சன் ஸ்ரீ ரெங்கபுரா என்ற பகுதியில் ஒரு வீட்டில் குடியிருந்தோம். அதன்பிறகு பால்பண்ணையிலேயே குடியிருந்தோம். பால்பண்ணை என்பது வழக்கு சொத்தா என்றால் வழக்கு சொத்திலுள்ள ஒரு பகுதியாகும். வழக்கு சொத்திற்கு அருகில் கல்யாண சுந்தரம் பிள்ளைக்கு வேறு சொத்துக்கள் இல்லை. தாவா சொத்தில் முதன்முதலில் எப்போது பால்பண்ணை வைக்கப்பட்டது என்றால் 2008 அக்டோபரில் வைக்கப்பட்டது. அதன் பெயரில் திருமலை திருப்பதி பசும்பால் பண்ணையாகும். IBM நிறுவனத்தில் வேலை பார்த்த கட்டத்தில் நான் தனியாக வேறு தொழில் செய்யக்கூடாது என்றால் அதுபோன்ற தடையில்லை. IBM நிறுவனத்தில் கொடுத்த வேலை நியமன உத்தரவு கைவசம் உள்ளதா என்றால் தேடிப் பார்க்கவேண்டும், இருந்தால் தாக்கல் செய்கிறேன். 2008 ல் எனக்கு 25 வயது. பால்பண்ணைக்கும், பிரதிவாதிகளுக்கும் ஏதேனும் சம்மந்தம் உண்டா என்றால் இல்லை, எப்போதாவது ஆலோசனை கேட்பேன். அந்த பால்பண்ணைக்கு கலப்பின பசுமாடுகள் வாங்கினேன். பசுக்களை பெங்களூரிலிருந்து வாங்கினேன். நிறைய நபர்களிடம் வாங்கினேன், குறிப்பாக காயத்ரி நடராஜன் என்பவரிடமிருந்து பசுக்களை வாங்கினேன். மாடுகள் வாங்க அவருடன் ஒப்பந்தம் போட்டேனா என்றால் கொட்டேசன் மட்டும் கொடுத்தார். அதை வங்கியில் கொடுத்துள்ளேன். 2010, 2012, 2016 ஆகிய மூன்று ஆண்டுகளில் அவர் மாடுகளுக்கான கொட்டேசன் கொடுத்துள்ளார். 2010

ல் பசு பண்ணை வைக்க என் அம்மாவிடம் பணம் கேட்டேன், என் அம்மா 1 ஆம் பிரதிவாதியான என் பெரிய மாமாவிடம் சொல்லி வங்கி கடன் செய்து தந்தார். அந்த கடன் வாங்க தாவா சொத்தை வங்கியில் அடமானம் வைத்து பிரதிவாதிகள் கடன் வாங்கிக் கொடுத்தார்களா என்றால் அதை அவர்களிடம்தான் கேட்கவேண்டும். நான் தாவா சொத்திற்கு வில்லங்கம் எடுத்துப் பார்க்கவில்லை. தாவா சொத்திற்கான ஆவணங்கள் வங்கியில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வாசாஆ.2 ஆவணத்தைப் பற்றி எல்லாம் தெரியுமா என்றால் 2020 க்கு பிறகு உள்ள விபரங்கள் எல்லாம் தெரியும். வாசாஆ.2 ல் எனது கையொப்பம் எதுவுமில்லை. வாசாஆ.2 ல் பிரதிவாதிகளான எனது தாய்மாமாக்கள் அவர்களது சொத்தை வங்கியில் அடமானம் வைத்து எனக்காக ரூ.6 இலட்சம் கடன் வாங்கித் தந்ததாக வாசகம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தில்லை நகர் KVB வங்கியில் கணக்குகள் முன்பு இருந்தது. மேற்படி வாசாஆ,2 ல் கண்ட கடனை திருப்பி அடைத்தேனா என்றால் முதலில் ரூ.4 இலட்சம் நான் செலுத்தினேன். ரூ.3 இலட்சம் என் தாயார் செலுத்தினார். ரூ.60000/– த்தை 2018 –ல் வங்கி வட்டி தள்ளுபடியாக தந்தது. மேற்படி பணம் செலுத்தப்படாமல் NPA ஆக வகைப்பாடு செய்யப்பட்டதா என்றால் அவ்வாறில்லை. மேற்படி கடனுக்கு ரூ.1,76,556/– பாக்கியாக இருந்தபோது நான் செலுத்தாததால் NPA ஆக வகைப்பாடு செய்து வங்கி என்னிடம் காட்டப்படும் கடிதம் அனுப்பியது என்றால் சரிதான். அந்த கடிதம் பிவாசாஆ.1 ஆகும். மேற்படி பிவாசாஆ,1 ல் கண்ட தொகையை நான் செலுத்தி கடனை முடித்தேன் என்பதைக் காட்ட என்னிடம் ஆவணம் உள்ளதா என்றால் தற்சமயம் இல்லை. என்னிடம்

காட்டப்படும் 06.02.2026 தேதிய வங்கி கடிதம் சரிதான். அந்த கடிதம் **பிவாசாஆ.2** ஆகும். அதன்படி மேற்படி கடனில் ரூ3,60,000 பாக்கியிருந்தது. *ரூ.60000–* தள்ளுபடி தந்தார்கள். பாக்கி ரூ.3 இலட்சத்தை என் அம்மா அவரது அண்ணனான 1 ஆம் பிரதிவாதியிடம் கொடுத்து செலுத்த சொன்னார். என் அம்மா அவ்வாறு ரூ.3 இலட்சம் கொடுத்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அதை என் அம்மாவிடம்தான் கேட்கவேண்டும். என் தாயாருக்கு வங்கி கணக்கு இருந்ததா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. என் தாயாருக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை. நான் எனது வங்கி கணக்கிலிருந்து என் தாயாரின் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியதில்லை, நேரில் கொடுப்பேன். நான் பிரதிவாதிகள் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தியுள்ளேன். அதற்கு கணக்கு உள்ளதா என்றால் இல்லை. அந்த பால்பண்ணையில் வேறு யாரும் பங்குதாரராக இல்லை. 1 ஆம் பிரதிவாதி கோவில் அறநிலையத்துறையில் வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளார். 2 ஆம் பிரதிவாதி ரெயில்வேயில் வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளார். என்னிடம் காட்டப்படும் விலைப்புள்ளியின் பின்புறம் பேனாவில் எழுதப்பட்ட விபரத்தை நான்தான் எழுதினேன். அந்த விலைப்புள்ளி நான் கொடுத்ததுதான். அந்த விலைப்புள்ளி மற்றும் பின்புறமுள்ள விபரத்துடன் **பிவாசாஆ.3** ஆகும். 2014 க்கு முன்பு KVB வங்கியில் ஏற்பட்ட கடனுக்கு நான் பணம் ஏதும் செலுத்தினேனா என்றால் செலுத்தினேன். இந்த வழக்குகள் ஏற்படுவதற்கு முன்பு நானும், பிரதிவாதிகளும் சுமூகமாக இருந்தோம் என்றால் சரிதான், ஒரே வீட்டில் இருந்தோம். நாங்கள் ஒரே வீட்டில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. நான் எதற்காக IBM

வேலையை விட்டுவிட்டு மாட்டுப்பண்ணை வேலைக்கு வந்தேன் என்றால் மேற்படி வேலையில் இருந்துக் கொண்டே மாட்டுப்பண்ணையை நடத்தினேன், எனது விருப்பத்தின் அடிப்படையில் மாட்டுப்பண்ணையை நடத்தினேன். மாட்டுப் பண்ணை வைக்க அரசிடம் அனுமதி வாங்கவில்லை. மாட்டுப் பண்ணைக்கு தனியாக மின் இணைப்பு எண் உண்டு. அதன் எண். SC 2133 ஆகும். அந்த மின் இணைப்பு 1 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ளது. அந்த மின் இணைப்பு 2010 ல் வாங்கப்பட்டது. அதை நான் வாங்கவில்லை, 1 ஆம் பிரதிவாதிதான் வாங்கினார். அந்த மின் இணைப்பு வாங்க நான் சம்மத கையெழுத்து எதுவும் செய்யவில்லை. 2015 ல் IBM நிறுவனத்திலிருந்து வேலையை விட்டுவிட்டு வந்தேன் என்றும், அதன்பிறகு பிரதிவாதிகள் பார்த்து வந்த மாட்டுப் பண்ணை நிர்வாகத்திற்கு நான் வந்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கோ, என் தாயாருக்கோ எந்தவித உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. இந்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. வாசாஆ.2 ன் படி KVB வங்கியில் கடன் கேட்கும்போதே தாவா சொத்துக்கள் உயிலின்படி பிரதிவாதிகளுக்குதான் பாத்தியம் என்று எங்களுக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. வழக்குரையில் உள்ள விபரங்களை நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். வழக்குரையில் அந்த உயிலின் தன்மை மற்றும் நுணுக்கங்கள் தெரியாமல் கையொப்பம் செய்ததாக 6 ஆம் பத்தியில் சொல்லியுள்ளேனா என்றால் அதில் அவ்வாறு உள்ளது. நான் பிரதிவாதிகளின் சகோதரி மகன் என்பதால் அவர்களது சொத்தில் மாட்டுப் பண்ணை வைக்க 2014 ல் அனுமதி மட்டும் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கோ, என்

தாயாருக்கோ உரிமையில்லை என்றால் சரியல்ல. இந்த தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.